## நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சத்தியமங்கலம்

**முன்னிலை: திரு. P. ரஞ்சித்குமார், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,**
**சத்தியமங்கலம்.**

**2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி மாதம் 26ம் நாள்**
**2026ம் வருடம் மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 1249/2019**

**CNR. No.TNED07-001827-2019**

M.கணேசன் (வயது 42/2019)
த/பெ.மாரநாயக்கர்,
ஸ்பென்சர் பாய்ண்ட்,
திருவள்ளுவர் வீதி,
அரியப்பபாளையம் அஞ்சல்,
சத்தியமங்கலம் வட்டம்,
ஈரோடு மாவட்டம். ....... புகார்தாரர்

– எதிரிடை –

P. பொன்னுசாமி (வயது 49/2019)
த/பெ. பழனிச்சாமி,
2/65ஏ, அங்கணகவுண்டன் புதூர்,
தாசரிபாளையம்,
கொமராபாளையம் அஞ்சல்,
சத்தியமங்கலம் வட்டம்,
ஈரோடு மாவட்டம். ...... எதிரி

**Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019.**

| | |
|---|---|
| Name of the Police Station and the Cr. No. | - |
| Name | P.Ponnusamy |
| Father Name/Husband Name | S/o. Palanisamy |
| Occupation | Coolie |

| | |
|---|---|
| Residency and Office address | 2/65A, Anganagoundan Pudhur, Dhasaripalayam, Komarapalayam, Sathyamangalam Taluk, Erode District. |
| Age | 49/2019 |
| Occurrence | 29.07.2019 |
| Complaint | 15.11.2019 |
| Apprehension | - |
| Release on Bail | - |
| Commitment | Not applicable |
| Commencement of trial | 22.05.2025 |
| Closure of trial | 25.02.2026 |
| Sentence or Order | Conviction |
| Service of copy of Judgment an accused | 10.03.2026 |
| Explanation of Delay | Delayed by both parties |

இவ்வழக்கானது கடந்த 21.11.2019ம் தேதியன்று சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 1249/2019 ஆக அழைப்பாணை வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சிவக்குமார்,பி.ஏ.,பி.எல்., அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.M.சண்முகம்,பி.ஏ.எல்.,எல்.எல்.பி., அவர்களும் ஆஜராகியும், புகார்தாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>//தீர்ப்புரை//</u>

1. இந்த வழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 மற்றும் 142—ன் கீழ் தாக்கல் செய்து இவ்வழக்கின் எதிரியை காசோலை மோசடி குற்றத்திற்காக தண்டிக்க வேண்டியும், புகார்தாரருக்கு நஷ்டஈடு செலுத்தக்கோரியும், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>புகாரின் சுருக்கம்</u>:–

இவ்வழக்கின் புகார்தாரர் கணேசன் தன்னுடைய புகார்மனுவில் எதிரி நன்கு பழக்கமானவர் என்றும், இவ்வழக்கின் எதிரி கடந்த 29.06.2019ம் தேதியன்று அவசிய குடும்ப செலவு தேவைக்காக கைமாற்றுக் கடனாக ரூ.1,20,000/– பெற்றுக்கொண்டு, மேற்படி கைமாற்றுக் கடனை திருப்பி செலுத்துவதற்கு ஆதரவாக 29.07.2019 பின் தேதியிட்டு கனரா வங்கி, சத்தியமங்கலம் கிளை காசோலை எண்.311459 யை ரூ.1,20,000/–க்கு பூர்த்திசெய்து கையெழுத்து செய்து புகார்தாரருக்கு அளித்தார்.

3. இவ்வழக்கின் எதிரி புகார்தாரரிடம் கேட்ட வேண்டுகோளுக்கிணங்க கடந்த 29.07.2019 ம் தேதியன்று தான் வங்கிக்கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, சத்தியமங்கலம் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்த போது மேற்படி காசோலையானது Funds Insufficient என்ற காரணத்திற்காக வசூல் ஆகாமல் கடந்த31.07.2019 ம் தேதியன்று திருப்புதல் குறிப்பாணை மூலம் திரும்பியது என்றும், அதனை புகார்தாரர் 05.08.2019ம் தேதியில் வங்கி குறிப்பாணை மற்றும் அசல் காசோலையுடன் திரும்ப பெற்றுக்கொண்டார் என்றும், எதிரி மீண்டும் 2019 செப்டம்பர் மாதம் நான்காவது வாரத்தில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் 23.09.2019 ம் தேதியில் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த போது "Sign Mismatch" என்ற காரணத்திற்காக வசூல் ஆகாமல் கடந்த 25.09.2019ம் தேதியன்று திருப்புதல் குறிப்பாணை மூலம் திரும்பியது என்றும், அதன் காரணமாக இவ்வழக்கின் புகார்தாரர் எதிரிக்கு காசோலை வசூல் ஆகாதது குறித்தும், காசோலைக்குண்டான தொகையை 15 நாட்களுக்குள் திருப்பி செலுத்தக் கோரியும், தன்னுடைய வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பை 05.10.2019 ம் தேதியன்று அனுப்பினார் என்றும். மேற்படி அறிவிப்பை இவ்வழக்கின் எதிரி கடந்த 23.10.2019ம் தேதியன்று பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் அளிக்கவில்லை என்றும், காசோலை தொகையை திருப்பி செலுத்தவில்லை என்றும், ஆகவே இவ்வழக்கின் எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138 ன் கீழ் தண்டிக்க வேண்டியும், புகார்தாரருக்கு இழப்பீட்டு தொகையை வழங்க உத்தரவிடவேண்டியும் கடந்த 15.11.2019 ம் தேதியன்று

இந்நீதிமன்றத்தில் புகார் மனு தாக்கல் செய்துள்ளார்.

4. இந்நீதிமன்றமானது இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பு புகார் மனு, ஆவணங்கள் புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

5. இவ்வழக்கின் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பின்பு இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ள விபரம் குறித்து உறுதிசெய்த பின்பு, யோசிக்க அவகாசம் கொடுக்கப்பட்டு, பின்னர் எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 251 ன் கீழ் குற்றத்தை பற்றி வினவியபோது, பொய் வழக்கு என்றும், காசோலை என்னுடையது தான் என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து என்றும் கூறியுள்ளார். அதன் பின்பு இந்நீதிமன்றம் எதிரியின் மீது மாற்றுமுறையாவணச் சட்டம் பிரிவு 138ன் கீழான குற்றத்திற்கு சாட்சி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

6. இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பில், புகார்தாரர் கணேசன் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பு.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ளது.

7.<u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் வழக்கின் சுருக்கம்:-</u>

இவ்வழக்கின் புகார்தாரர் கணேசன் தன்னுடைய புகார்மனுவில் எதிரி நன்கு பழக்கமானவர் என்றும், இவ்வழக்கின் எதிரி கடந்த 29.06.2019ம் தேதியன்று அவசிய குடும்ப செலவு தேவைக்காக கைமாற்றுக் கடனாக ரூ.1,20,000/- பெற்றுக்கொண்டு, மேற்படி கைமாற்றுக் கடனை திருப்பி செலுத்துவதற்கு ஆதரவாக 29.07.2019 பின் தேதியிட்டு கனரா வங்கி, சத்தியமங்கலம் கிளை காசோலை எண்.311459 பு.சா.ஆ.1 யை ரூ.1,20,000/-க்கு பூர்த்திசெய்து கையெழுத்து செய்து புகார்தாரருக்கு அளித்தார்.

8. இவ்வழக்கின் எதிரி புகார்தாரரிடம் கேட்ட வேண்டுகோளுக்கிணங்க கடந்த 29.07.2019 ம் தேதியன்று தான் வங்கிக்கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, சத்தியமங்கலம் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்த போது மேற்படி காசோலையானது Funds Insufficient என்ற காரணத்திற்காக வசூல் ஆகாமல் கடந்த31.07.2019 ம் தேதியன்று திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.2 மூலம் திரும்பியது என்றும், அதனை புகார்தாரர் 05.08.2019ம் தேதியில் வங்கி குறிப்பாணை மற்றும் அசல் காசோலையுடன் திரும்ப பெற்றுக்கொண்டார் என்றும், எதிரி மீண்டும் 2019 செப்டம்பர் மாதம் நான்காவது வாரத்தில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க மீண்டும் 23.09.2019 ம் தேதியில் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த போது "Sign Mismatch" என்ற காரணத்திற்காக வசூல் ஆகாமல் கடந்த 25.09.2019ம் தேதியன்று திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ.3 மூலம் திரும்பியது என்றும், அதன் காரணமாக இவ்வழக்கின் புகார்தாரர் எதிரிக்கு காசோலை வசூல் ஆகாதது குறித்தும், காசோலைக்குண்டான தொகையை 15 நாட்களுக்குள் திருப்பி செலுத்தக் கோரியும், தன்னுடைய வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு பு.சா.ஆ.4 ஐ 05.10.2019 ம் தேதியன்று அனுப்பினார் என்றும். மேற்படி அறிவிப்பை இவ்வழக்கின் எதிரி கடந்த 23.10.2019ம் தேதியன்று பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.சா.ஆ.5 என்றும், மேற்படி அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு எதுவும் அளிக்கவில்லை என்றும், காசோலை தொகையை திருப்பி செலுத்தவில்லை என்றும், ஆகவே இவ்வழக்கின் எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் 138 ன் கீழ் தண்டிக்க வேண்டியும், புகார்தாரருக்கு இழப்பீட்டு தொகையை வழங்க உத்தரவிடவேண்டி சாட்சியம் அளித்துள்ளார்.

9. புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகளை எடுத்து, எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், நடராஜன் என்பவர் புகார்தாரரிடம் ரூ.10000/−கடன் வாங்கி என்னிடம் ரூ.5000/− கொடுத்தார். அதற்கு நான் வட்டி இதுவரை ரூ.2000/−கட்டியுள்ளேன். புகார்தாரர் என்னிடம் ரூ,100000/− கொடுக்க வேண்டும் என்பது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதனை மறுத்து கூறி

பொய்வழக்கு என்று கூறி தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில் பின்பு எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை

10. **<u>எதிரி தரப்பில் இவ்வழக்கில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதம் :-</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் இவ்வழக்கில் கூறுவது போல் இவ்வழக்கின் எதிரி ரூ.1,20,000/- புகார்தாரரிடமிருந்து கடடன் தொகை பெறவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரிக்கும் நடராஜன் என்பவருக்கும் தான் வரவு செலவு உள்ளது என்றும், இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மூலமாக நடராஜன் என்பவரிடம் ரூ.10,000/- கடன் வாங்கக்கூறியதன் அடிப்படையில் இவ்வழக்கின் புகார்தாரர் ரூ.10,000/- கடன் வாங்கி எதிரியிடம் ரூ.5,000/- கொடுத்தார் என்றும், அந்த கடன் தொகைக்கு இவ்வழக்கின் எதிரி இது நாள் வரை வட்டி ரூ.20,000/- வரை செலுத்தியுள்ளார் என்றும், இவ்வழக்கின் புகார்தாரர் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எதிரி தரப்பில் எதிர் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**11.<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனைகள் என்னவென்றால் :</u>**

1. இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் அனுமதித்துள்ள காலவரைக்குள் மற்றும் வழிக்காட்டுதலின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளதா?

2. புகார்தாரர் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படியான குற்றத்தை எவ்வித ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளாரா ?

3. இவ்வழக்கின் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டதின் பிரிவு 139ல் கூறப்பட்டுள்ள புகார்தாரருக்குரிய சட்டத்துணிபை இவ்வழக்கு சங்கதியிலிருந்து போதிய நிரூபணங்கள் கொண்டு மறுதளித்து நிரூபணம் செய்துள்ளாரா?

**12.<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை எண்.1க்கான தீர்வு :</u>**

இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் அனுமதித்துள்ள சட்ட காலவரையறைக்குள் மற்றும் வழிகாட்டுதலின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளதா?

என்பதனை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் எதிரி கனரா வங்கி, சத்தியமங்கலம் கிளையின் காசோலை எண்.311459ஐ 29.07.2019என பின்தேதியிட்டு ரூ.1,20,000/−க்கு கையொப்பமிட்டு அளித்துள்ளார் என்றும், அதனை புகார்தாரர் வங்கி கணக்கு வைத்துள்ள இந்தியன் வங்கி, சத்தியமங்கலம் கிளையில் கடந்த 29.07.2019 வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி காசோலையை புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்தபோது "Funds Insufficient" என்ற காரணத்திற்காக வசூலாகாமல் கடந்த 31.07.2019 ம் தேதியன்று திருப்பப்பட்டது என்றும், அதற்கான திருப்புதல் குறிப்பாணை 05.08.2019 அன்று வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டார் என்றும், எதிரி மீண்டும் 2019 செப்டம்பர் மாதம் நான்காவது வாரத்தில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க புகார்தாரர் மீண்டும் 23.09.2019ம் தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது "Sign Mismatch" என்ற காரணத்திகாக வசூலாகாமல் கடந்த 25.09.2019ம் தேதியன்று திருப்பப்பட்டது என்றும், பின்னர் அது சம்மந்தமாக புகார்தாரர் எதிரிக்கு தன்னுடைய வழக்கறிஞர் மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு 05.10.2019 ம் தேதியன்று அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு 23.10.2019ம் தேதியன்று எதிரி பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பாமல் இருந்துள்ளார் என்று புகார்தாரர் கூறி இவ்வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார்.

13. ஆகவே எதிரி புகார்தாரருக்கு அளித்த காசோலையை புகார்தாரர் 3 மாத காலத்திற்குள் தன்னுடைய வங்கியில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது "Sign Mismatch" என்று கடைசியாக கடந்த 25.09.2019 தேதியன்று திரும்பி வந்த காரணத்தினால் ஒரு மாத காலத்திற்குள் கடந்த 05.10.2019ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி கடந்த 23.10.2019 ம் தேதியன்று பெற்றுக்கொண்டுள்ளார், அன்றைய தினங்களிலிருந்து 15 நாள் கழித்து ஒரு மாதக் காலத்திற்குள் கடந்த15.11.2016ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் புகார்தாரர் புகார் மனு தாக்கல் செய்துள்ளார். ஆகவே, இவ்வழக்கின் புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் அனுமதித்துள்ள

காலவரையறைக்குள் மற்றும் வழிகாட்டுதலின்படி தாக்கல் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை எண்.3க்கான தீர்வு:</u>

இவ்வழக்கின் எதிரி தரப்பில் இவ்வழக்கு காசோலையானது எதிரியினுடைய காசோலை என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியினுடைய கையெழுத்து என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, வழக்கு காசோலையானது புகார்தாரர் இவ்வழக்கில் கூறியுள்ள கடன் மற்றும் பொறுப்புகளுக்கு அளிக்கப்படவில்லை என்பதையும் இவ்வழக்கின் புகார்தாரருக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் பிரிவு 139 அளித்துள்ள சட்டத்துணிபை வழக்கு சங்கதியிலிருந்து போதுமான நிரூபணங்கள் கொண்டு மறுதளித்து நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு இவ்வழக்கின் எதிரி தரப்பையே சாரும்.

15. இவ்வழக்கின் எதிரி தரப்பில் வழக்கு காசோலையானது புகார்தாரர் இவ்வழக்கில் கூறியுள்ள சட்டப்படியான கடன் மற்றும் பொறுப்புகளுக்கு அளிக்கப்படவில்லை என்பதையும் புகார்தாரருக்குரிய மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் பிரிவு 139ன் கீழான சட்டதுணிபை வழக்கு சங்கதிகளிலிருந்து மறுதளித்து நிரூபணம் செய்துள்ளாரா என்பதை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் புகார்தாரர் இவ்வழக்கில் கூறுவது போல் இவ்வழக்கின் எதிரி ரூ.1,20,000/- புகார்தாரரிடமிருந்து கடடன் தொகை பெறவில்லை என்றும், இவ்வழக்கின் எதிரிக்கும் நடராஜன் என்பவருக்கும் தான் வரவு செலவு உள்ளது என்றும், இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மூலமாக நடராஜன் என்பவரிடம் ரூ.10,000/- கடன் வாங்கக்கூறியதன் அடிப்படையில் இவ்வழக்கின் புகார்தாரர் ரூ.10,000/- கடன் வாங்கி எதிரியிடம் ரூ.5,000/- கொடுத்தார் என்றும், அந்த கடன் தொகைக்கு இவ்வழக்கின் எதிரி இது நாள் வரை வட்டி ரூ.20,000/- வரை செலுத்தியுள்ளார் என்றும், இவ்வழக்கின் புகார்தாரர் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எதிரி தரப்பில் எதிர் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

16. இவ்வழக்கின் எதிரி தரப்பில் கூறியுள்ள மேற்படி எதிர்வாதங்களை மேற்படி

நீதிமன்றம் பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் எதிரி தரப்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள மேற்படி எதிர்வாதத்தை இவ்வழக்கின் எதிரி பு.சா.1 புகார்தாரரை குறுக்குவிசாரணை செய்யும்போதும் இந்நீதிமன்றம் எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழும் கேள்வி கேட்டபோதும் முன்னெடுத்துள்ளார். இவ்வழக்கின் எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்குவிசாரணை செய்த போது குறுக்கு விசாரணையின் 12வது பத்தியில்

> **வழக்கின் எதிரிக்கும் நடராஜன் என்பவருக்கும் தான் வரவு செலவு என்றும், அதற்காகத்தான் இவ்வழக்கு காசோலையை எதிரி நடராஜனிடம் கொடுத்தார் என்றும், நடராஜ் இறந்துவிட்டதால் அவரிடம் இருந்த காசோலையை வைத்து நான் எதிரி மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல** என்று எதிரி தரப்பில் கேள்வி கேட்கப்பட்டு புகார்தாரரால் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

17. மேலும், இவ்வழக்கின் எதிரியிடம் இந்நீதிமன்றம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் கேள்வி கேட்டபோது

> **நடராஜன் என்பவர் புகார்தாரரிடம் ரூ.10,000/- கடன் வாங்கி என்னிடம் ரூ.5,000/- கொடுத்தார். அதற்கு நான் வட்டி இதுவரை ரூ.20,000/- கட்டியுள்ளேன். புகார்தாரர் என்னிடம் ரூ.1,00,000/- கொடுக்கவேண்டுமென்று பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்** என்று கூறியுள்ளார்.

ஆகவே எதிரி தரப்பில் கூறியுள்ள மேற்படி விபரங்களை பரிசீலனை செய்கையில் இவ்வழக்கின் எதிரி தரப்பில் கூறுவது போல் வழக்கு காசோலையானது நடராஜ் என்பவரிடம் செய்து கொண்ட வரவு செலவிற்காக நடராஜ் என்பவரிடம் அளித்திருக்கும் பட்சத்தில் இவ்வழக்கின் எதிரி வழக்கு காசோலையை அளிக்கும் போது வழக்கு காசோலையில் நடராஜ் என்பவருடைய பெயரை எழுதி கொடுத்திருப்பார். ஆனால் இவ்வழக்கின் எதிரி அவ்வாறு கொடுக்காதது எதிரி தரப்பு எதிர் வாதத்தை சந்தேகத்திற்குள்ளாகிறது. மேலும் இவ்வழக்கின் எதிரி தரப்பில் வழக்கு காசோலை நடராஜ் என்பவரிடம் புகார்தாரர் மூலம் ரூ.10,000/- கடன் வாங்கி அதில் ரூ.5,000/- தான் புகார்தாரரிடம் இருந்து இவ்வழக்கின் எதிரி பெற்றிருக்கும்பட்சத்தில் ரூ.20,000/- வரை வட்டி செலுத்தியிருக்க மாட்டார். காரணம் யாரும் அசல் தொகையை விட அதிக

தொகையை வட்டியாக செலுத்த மாட்டார்கள்.

18. மேலும் எதிரிதரப்பில் கூறுவது போல் வழக்கு காசோலையானது நடராஜ் என்பவரிடம் கொடுத்திருக்கும்பட்சத்தில் அவர் இறந்த பின்பு அதனை நடராஜனின் வாரிசுகளிடம் திரும்ப பெற இவ்வழக்கின் எதிரி நடவடிக்கை எடுத்திருப்பார். அவ்வாறு எதிரி தரப்பில் வழக்கு காசோலையை திரும்ப பெற நடவடிக்கை எடுக்காதது எதிரி தரப்பு எதிர்வாதத்தை சந்தேகத்திற்குள்ளாகிறது. மேலும் இவ்வழக்கு கசோலையானது முதன்முறை வசூலாகாமல் திரும்பியவுடன் அது பற்றிய விபரம் வங்கியினர் மூலமாக இவ்வழக்கின் எதிரிக்கு கட்டாயம் தெரிந்திருக்கும். அது பற்றி தெரிந்தும் இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மீது எவ்விதமான சட்ட நடவடிக்கையும் எடுக்காதது இவ்வழக்கின் எதிரி தரப்பு எதிர்வாதத்தை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது. மேலும் இவ்வழக்கின் புகார்தாரர் வழக்கு காசோலை இரண்டாவது முறையாக வசூலாகாமல் திரும்பியவுடன் இவ்வழக்கின் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு பு.சா.ஆ.4 ஐ கடந்த 05.10.2019ம் தேதியன்று அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை இவ்வழக்கின் எதிரி பு.சா.ஆ.5 அஞ்சலக ஒப்புதல் அட்டையில் கையெழுத்து செய்து பெற்றுக்கொண்டுள்ளார். அப்போதாவது இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மீது காவல் நிலையத்திலோ நீதிமன்றத்தின் மூலமாகவோ புகார் கொடுத்து சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இவ்வழக்கின் எதிரி அவ்வாறான எவ்விதமான நடவடிக்கையும் எடுக்காதது இவ்வழக்கு எதிரி தரப்பு எதிர்வாதத்தை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது.

19. மேலும் இவ்வழக்கின் எதிரி புகார்தாரர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டாலும் குறைந்தபட்சம் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்ட பின்பு மறுப்பு தெரிவித்து பதில் அறிவிப்பாவது புகார்தாரருக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கின் எதிரி பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. மேலும் இந்நீதிமன்றம் இவ்வழக்கின் எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 251 ன் கீழ் கேள்வி கேட்டபோது வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்று ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே வங்கியில் அளிக்காத கையெழுத்தை வழக்கு

காசோலையில் எதிரி போட்டது தவறாகும். ஆகவே இவ்வழக்கின் எதிரி தரப்பில் வழக்கு காசோலையானது நடராஜன் என்பவரிடம் புகார்தாரர் மூலமாக பெற்ற கடன் தொகைக்காக பாதுகாப்பிற்காக கொடுத்ததாக கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லை. மேலும் அது உண்மையல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. மேலும் இவ்வழக்கின் வழக்கு காசோலை எதிரியின் காசோலை என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால் இவ்வழக்கு புகார்தாரருக்கு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139 ன் கீழான சட்டத்துணிபு கிடைக்கப்பெறுகிறது. ஆகவே இவ்வழக்கின் எதிரி தரப்பில் வழக்கு காசோலை எவ்வாறு புகார்தாரர் வசம் சென்றது என்பதற்கான காரணத்தை இவ்வழக்கில் சரிவர நிரூபணம் செய்யாத காரணத்தினாலும் இவ்வழக்கின் எதிரி தரப்பு எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாத காரணத்தினாலும் இவ்வழக்கு காசோலையானது எதிரி புகார்தாரரிடம் பெற்ற ரூ.1,20,000/- கடன் தொகையை தீர்க்கும் வகைக்காக அளிக்கப்பட்டது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே இவ்வழக்கின் எதிரி தரப்பில் வழக்கு காசோலையானது புகார்தாரர் இவ்வழக்கில் கூறியுள்ள சட்டப்படியான கடன் மற்றும் பொறுப்புகளுக்கு அளிக்கப்படவில்லை என்பதையும் புகார்தாரருக்குரிய மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் பிரிவு 139ன் கீழான சட்டதுணிபை வழக்கு சங்கதிகளிலிருந்து மறுதளித்து நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**21. <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை எண்.2க்கான தீர்வு:</u>**

இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பில், இவ்வழக்கின் எதிரி புகார்தாரருக்கு 29.07.2019ம் தேதியிட்டு ரூ.1,20,000/-க்கு அளித்த கனரா வங்கி சத்தியமங்கலம் கிளையின் காசோலை எண்.311459 யை பு.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது Funds Insufficient என்ற காரணத்திற்காக 31.07.2019 ம் தேதியன்று வசூலாகாமல் திருப்பப்பட்டதற்கான 05.08.2019ம் தேதியிட்ட திருப்புதல் குறிப்பாணையை பு.சா.ஆ,2 ஆகவும், மேற்படி காசோலையை மீண்டும் வசூலுக்கு

தாக்கல் செய்தபோது "Sign Mismatch" என்ற காரணத்திற்காக 25.09.219 ம் தேதியன்று வசூலாகாமல் திருப்பப்பட்டதற்கான திருப்புதல் குறிப்பாணையை பு.சா.ஆ,3 ஆகவும், இவ்வழக்கின் எதிரிக்கு 05.10.2019 ம் தேதியிட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பு.சா.ஆ.4 ஆகவும். மேற்படி அறிவிப்பை இவ்வழக்கின் எதிரி கடந்த 23.10.2019ம் தேதியன்று பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

22. மேலும், புகார்தாரர் இவ்வழக்கில் கூறியுள்ள சங்கதிகளையோ அல்லது புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள பு.சாஆ.1 முதல் பு.சாஆ.5 வரையிலான ஆவணங்களையோ போதுமான நிரூபணங்கள் கொண்டு மறுத்தளித்து நிரூபணம் செய்யவில்லை. ஆகவே, புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழான இவ்வழக்கை எவ்வித ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

23. ஆகவே, இவ்வழக்கின் எதிரி புகார்தாரருக்கு அளிக்க வேண்டிய கடன் தொகை ரூ.1,20,000/- ஐ தீர்க்கும் வகைக்காக ரூ.1,20,000/- க்கு அளித்த எதிரி வங்கி கணக்குள்ள கனரா வங்கி, சத்தியமங்கலம் கிளையின் காசோலை எண்.311459 பு.சா.ஆ.1 ஆனது இரண்டாவது முறையாக மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்தபோது "Sign Mismatch" என்ற காரணத்திற்காக 25.09.219 ம் தேதியன்று வசூலாகாமல் திருப்புதல் குறிப்பாணை பு.சா.ஆ,3 மூலம் திரும்பி வந்த காரணத்தினால், இவ்வழக்கின் புகார்தாரர் எதிரிக்கு 05.10.2019 ம் தேதியிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு பு.சா.ஆ.4 அனுப்பியும், இவ்வழக்கின் எதிரி காசோலைக்குண்டான தொகையை அளிக்காத காரணத்தினாலும் இவ்வழக்கில் எதிரி கூறியுள்ள எதிர் வாதங்களை போதிய சங்கதிகளை கொண்டு மறுத்தளித்த நிரூபணம் செய்யாத காரணத்தினாலும் இவ்வழக்கின் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றத்தை புரிந்த நபர் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. ஆகவே எதிரிக்கு இவ்வழக்கில் தண்டனை அளிப்பது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

24. எதிரியின் தண்டனை குறித்து பார்க்கும்பொழுது பிரிவு 138, மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் படியான குற்றத்திற்கு 2 ஆண்டுகள் வரை தண்டனை மற்றும் அபராதம் (அ) இழப்பீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கானது பொருளாதாரம் சார்ந்த குற்றமாக இருப்பதாலும், இவ்வழக்கின் எதிரியை புகார்தாரருக்கு அளித்த காசோலைத் தொகையை இழப்பீடாக வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானம் செய்துள்ளதால் எதிரிக்கு இவ்வழக்கில் 6 மாத கால தண்டனை அளிப்பது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**25. <u>தீர்வு:-</u>**

இறுதியில், இவ்வழக்கின் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து, மேற்படி குற்றத்திற்காக எதிரிக்கு 06 (ஆறு மாதம்) மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், புகார்தாரருக்கு இழப்பீடாகக் காசோலைக்குரிய தொகையான ரூ.1,20,000/-( ரூபாய் ஒரு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஐ எதிரி ஒரு மாதக்காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று பிரிவு 357(3) குவிமுச-ன் படி உத்தரவு செய்தும், மேற்படி இழப்பீட்டு தொகை செலுத்தத் தவறும் பட்சத்தில் இவ்வழக்கின் எதிரிக்கு மேலும் 01 (ஒரு மாதம்) மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

26. இவ்வழக்கில், வழக்கு சொத்து எதுவும் இல்லாததால் அது குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் நேடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் என்னால் நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR
Date: 2026.03.10 18:11:02 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்

**பின் இணைப்பு:**

**புகார்தாரர் தரப்பு சாட்சி:-**

1. பு.சா.1 கணேசன் (புகார்தாரர்)

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| 1 | பு.சா.ஆ.1/பு.சா.1/மு.வி | 29.06.2019 | இவ்வழக்கின் எதிரி புகார்தாரருக்கு 29.06.2019ம் தேதியிட்டு ரூ.1,20,000/-க்கு அளித்த கனரா வங்கி, சத்தியமங்கலம் கிளையின் காசோலை எண்.311459- அசல் |
| 2 | பு.சா.ஆ.2/பு.சா.1/மு.வி | 31.07.2019 | எதிரி அளித்த கசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த போது மேற்படி காசோலையானது Funds Insufficent என்ற காரணத்திற்காக வசூலாகாமல் திரும்பியதற்கான திருப்புதல் குறிப்பாணை |
| 3 | பு.சா.ஆ.3/பு.சா.1/மு.வி | 25.09.2019 | எதிரி அளித்த கசோலையை மீண்டும் வசூலுக்கு தாக்கல் செய்த போது மேற்படி காசோலையானது Sign Mismatch என்ற காரணத்திற்காக வசூலாகாமல் திரும்பியதற்கான திருப்புதல் குறிப்பாணை |
| 4 | பு.சா.ஆ.4/பு.சா.1/மு.வி | 05.10.2019 | இவ்வழக்கின் புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| 5 | பு.சா.ஆ.5/பு.சா.1/மு.வி | 23.10.2019 | புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை |

**எதிரி தரப்பு சாட்சிகள்,சான்றாவணங்கள், சான்றுபொருள்கள்:-** இல்லை

**<u>குறிப்புகள்</u>:–**

1. தீர்ப்பு நாள் 10.03.2026.

2. இவ்வழக்கின் எதிரிக்கு அளிக்கப்பட்ட தண்டனையானது இந்நீதிமன்ற CMP.No. 69/2026 ன் கீழ் 10.04.2026 தேதி வரை நிறுத்தப்பட்டுள்ளது.

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.03.10 18:11:15 +0530

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT AT SATHYAMANGALAM

## CASE SUMMARY

**STC. No. 1249 of 2019**

| The period of remand of the accused | The date of filing of the complaint/final report in the court | The date of committal of the case to the court of sessions | The date of questioning of the accused U/s 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Filling of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Court, except routine petitions like petitions U/s 317 of the Code | Date of examination in-chief and cross examination of a witness | | | Date of examination of the accused u/s313 of the Code | Date of absconder of an accused and his appearance/ production, as the case may be and | Grant of stay by Superior Courts and the results thereof |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| - | 21.11.2019 | Nil | 9.11.2023 | CMP No.4764/2023<br>CMP No.4765/2023<br>CMP No.4766/2023<br>All Petitions Allowed | Pw's/ Dw's | Chief | Cross | 17.12.2025 | Nil | Nil |
| | | | | | PW1 | 22.05.2025 | 25.02.2026 | | | |
| | | | | | DW1 | - | - | | | |

RANJITHKUMAR Digitally signed by RANJITHKUMAR Date: 2026.03.10 18:11:22 +0530

Judicial Magistrate,
Sathyamangalam